# நற்செயல்களும் பிரதிபலன்களும்

அரபு மூலம் :

**ஹபீப் முஹம்மத் அல் மஹ்ரூஹ்**

தமிழ் வடிவம் :

**செய்னுதீன் எஸ் பரீத்**

ஜம்இய்யது அன்சாரிஸ் சுன்னதில் முஹம்மதிய்யா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் மகன் பாயாத்க்கு தந்தை யான் அன்புக் காணிக்கை

2003/11/16

# நற்செயல்களும் பிரதிபலன்களும்

*மூல ஆசிரியர் :*

**ஹபீப் முஹம்மத் அல் மஹ்ரூஹ்**

*தமிழ் வடிவம் :*

**செய்னுதீன் எஸ் பரீத்**

*வெளியீடு :*

*ஜம்இய்யது அன்சாரிஸ் சுன்னதில் முஹம்மதிய்யா,*

*பறகஹதெனிய,*

*வேஉட,*

*ஸ்ரீலங்கா.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தக விபரத் தொகுப்பு

பெயர் : நற்செயல்களும் பிரதிபலன்களும்

மூல ஆசிரியர் : ஹபீப் முஹம்மத் அல் யஹ்யூஹ்

தமிழ் வடிவம் : செய்னுதீன் எஸ் பரீத்

மொழி : தமிழ்

படிகள் : 3000

பக்கம் : 36

அளவு : 1/8 கிரௌன்

வெளியீடு : ஜம்இய்யது அன்சாரிஸ் சுன்னதில்
முஹம்மதிய்யா, பறகஹதெனிய,
வேஉட, ஸ்ரீலங்கா.

விலை : 20/-

ISBN : 955-8732-43-5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை

ஏகன் அல்லாஹ்வைப் புகழ்ந்து, அவன் தூதர், அவரைத் துயர்ந்தோர் அனைவர் மீதும் ஸலவாத்தும் ஸலாமும் சொல்லி...

இஸ்லாமிய சகோதரர்களே!

உங்கள் கரங்களில் தவழும் இச்சிறுநூல் எனது ஐந்தாவது ஆக்கமாகும்.

சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன், இலங்கை வந்த குவைத், பைத்துஸ் ஸகாத் நிறுவன பிரதிநிதி அஷ்ஷெய்க் ஹபீப் முஹம்மத் அல் யஹ்யூஹ் அவர்கள் ஒரு சிறு கையேடொன்றை எனக்கு அன்பளிப்புச் செய்தார்கள்.

அதைப் படித்து முடித்ததும், நம் தாய்மொழியில் வெளியிடவேண்டும் என்ற எண்ணம், அன்றே என்னில் கருக்கட்டியது. அதனால் உந்தப்பட்டு மொழிபெயர்ப்பையும் அப்போதே செய்து முடித்து வெளியீட்டிற்காக காத்திருந்தேன்.

அவனது மிகப்பெரும் கருணையினால், அதை வெளியிட, அகில இலங்கை ஜம்இய்யது அன்சாரிஸ் சுன்னதில் முஹம்மதிய்யாவின் கௌரவத் தலைவர், கௌரவ செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் இணக்கம் தெரிவித்து, பெருமனதுடன் ஏற்றுக்கொண்டதன் விளைவு இன்று இது நூலுருப் பெற்றிருக்கிறது.

அடுத்து, நூலின் உள்ளே நுழையுங்கள். ஓர் அழகிய வாழ்க்கை உங்கள் முன் விரியும். இதில் குறையிருப்பின் எனக்கு எழுதுங்கள். நிறைவு செய்வோம் இன்ஷாஅல்லாஹ்.

இதற்காக எனக்கு உதவி புரிந்த அனைவருக்கும் ஒட்டு மொத்தமாக, வழமைபோன்றல்லாது மனநிறைவாக என் நன்றியை சமர்ப்பிக்கிறேன்.

இதனைப் படிக்கும் நீங்கள், பயன் பெறுவதோடு, உங்கள் பிரார்த்தனைகளில் என்னையும், என் பெற்றோரையும், என் மனைவி மக்களையும், குடும்பத்தாரையும் சேர்த்துக்கொள்ள தவறாதீர்கள்.

*இஸ்லாமிய ஊழியன*
**செய்னுதீன் எஸ். பரீத**
*(அகத்திமுறிப்பான்)*

*81. POLWATTA,*
*PARAGAHADENIYA,*
*KU/WEUDA,*
*SRI LANKA.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூலநூலின் முன்னுரை

இப்பிரபஞ்சத்தைப் படைத்து, பக்குவப்படுத்தி, பரிபாலிக்கின்ற அல்லாஹ் ஒருவனே புகழுக்குரியவன். அவனது கருணையும் சாந்தியும், அவனால் இவ்வண்டத்திற்கு அருளாக அனுப்பப்பட்ட முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது தோழர்கள், அவர்களைத் துயர்ந்தோர்கள், அனைவர் மீதும் என்றென்றும் சொரியட்டும்!

கண்ணியத்துக்குரிய இஸ்லாமிய சகோதரா! உன் ஆத்மாவை இறை வழிபாட்டில் நீ செலுத்தத் தவறின் இறைவனுக்கு மாறு செய்கின்ற வேலைகளில் உன்னை அது நிச்சயம் இட்டுச் செல்லும்.

எண்ணற்ற அருட் கொடைகளை இறைவன் நமக்கு வாரி வழங்கியுள்ளான். நாம் செய்கின்ற மிகச் சிறிய நல்ல காரியங்களுக்கெல்லாம் நன்மைகளை அள்ளித் தருபவன் அவன். ஒரு சில வினாடிகளில் நாம் சொல்லுகின்ற, செய்கின்ற அனைத்திற்கும் பன் மடங்கு கூலிகள் தருவது மட்டுமல்லாது, எமக்கு வர இருக்கின்ற கஷ்டங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதனைகள், துன்பங்கள் அனைத்தையும் அவைகள் மூலம் நீக்கவும் செய்கிறான்.

எனவே, அவைகளில் சிலதை, உன் முன் நான் பட்டியல் போட்டுக் காட்ட விரும்புகிறேன். அவற்றை முறையாகச் செய்து முடிக்க முயற்சித்தால், நிச்சயம் அந்த இறைவன் வாக்களித்ததை இம்மையிலும் மறுமையிலும் தருவான். அவன் என்றுமே வாக்குறுதி மாறாதவன்.

*ஹபீப் முஹம்மத் அல் யஹ்யூஹ்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பதிப்புரை*

இஸ்லாம் வாழ்வின் எல்லாச் செயல்களுக்கும் வழிகாட்டுகின்ற மார்க்கமாகும். ஒவ்வொரு செயலையும் ஸாலிஹான நல்ல செயலாக அமைத்துக்கொண்டால், அதற்கான கூலியும் பிரதிபலன்களும் கிடைத்துக் கொண்டே இருக்கும்.

"நிச்சயமாக எவர்கள் ஈமான் கொண்டு, ஸாலிஹான நல்ல செயல்கள் செய்கிறார்களோ, அவர்களுக்கு முடிவேயில்லாத நிலையான கூலியுண்டு" (41:8) என அல்குர்ஆன் நற்செயல்களின்பால் ஆர்வமூட்டுகின்றது.

"முஸ்லிம்களுக்குப் பாதையில் இடையூறாக இருக்கும் ஒரு மரக்கிளையை அகற்றுபவரை, அல்லாஹ் சுவனத்தில் நுழைய வைப்பான்" (முஸ்லிம்) என நபி (ஸல்) அவர்கள் கூறி நற்செயல் களின்பால் தூண்டியுள்ளதோடு, அதன் பிரதிபலன்களையும் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

ஒரு செயலைச் செய்பவருக்கு அதன் மூலம் கிடைக்கின்ற கூலியையும் பிரதிபலன்களையும் இஸ்லாம் தெளிவாகவே வரையறுத்துக் காட்டியுள்ளது.

இந்த வகையில் இஸ்லாம் காட்டும் வழிமுறையின் அடிப்படையில் எமது எல்லாச் செயல்களையும் ஸாலிஹான நற்செயல்களாக மாற்றி அல்லாஹு தஆலா வழங்குகின்ற கூலியையும் பிரதிபலன்களையும் பெற்றுக்கொள்ள முயற்சிப்போம். அதற்கான ஒரு வழிகாட்டி, முன்மாதிரி நூலாக "நற்செயல்களும் பிரதிபலன்களும்" என்ற நூல் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்க அறிஞரும், குவைத் - ஸகரத் நிறுவனத்தின் அநாதைப் பராமரிப்புப் பிரிவுப் பணிப்பாளருமான அஷ்ஷெய்க் ஹபீப் முஹம்மது அல்யஹ்யூஹ் அவர்கள் தொகுத்த அரபி மொழியிலான சிறிய நூலை, தமிழ்வடிவில் தந்து, நற்செயல்களின்பால் மக்களை ஆர்வமூட்டுகின்றார் எமது ஜம்இய்யாவின் அநாதைப் பராமரிப்புப் பிரிவு உதவிப் பொறுப்பாளரான செய்னுதீன் எஸ் பரீத் அவர்கள்.

இது அவரது ஐந்தாவது ஆக்க வெளியீடாகும். முஸ்லிம் சமூகம் தன்னால் பயனடைந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கில், சமகால எழுத்துலகில் பிரவேசித்து, ஆக்கங்களையும் நூல்களையும் தருகின்ற செய்னுதீன் எஸ் பரீத் அவர்களது முயற்சி பாராட்டத் தக்கது. அவரது முயற்சிகள் தொடரவும், நற்செயல்களின்பால் மக்கள் ஆர்வத்துடன் செயல்படவும் வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

*அன்புடன்,*

**முஹம்மது அபூபக்கர் சித்தீக் மதனி**

*பொதுத்தலைவர்*

*ஜம்இய்யது அன்சாரிஸ் சுன்னதில் முஹம்மதிய்யா*

*தலைமையகம்*

*பறகஹதெனிய*

*வேஉட*

*11/09/2002*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நற்செயல்களும் | பிரதிபலன்களும் |
| --- | --- |
| 1 கூட்டாகத் தொழுவது தனித்துத் தொழுவதை விட. | இருபத்தியேழு மடங்கு சிறப்புமிக்கது. (புஹாரி. முஸ்லிம்) |
| உ முதல் தக்பீரிலேயே இமாமு(ஜமாஅத்து) டன் இணைந்து நாற்பது நாட்கள் அல்லாஹ்வுக்காக வென்றே தொழுதால் | அவர் நயவஞ்சகத் தனத்திலிருந்தும் நரகத்திலிருந்தும் விடுதலை பெற்றவர் என எழுதப்படும். (ஸஹீஹ் அல்ஜாமிஉ) |
| 3 தொழுகையை அதற்குரிய நேரத்தில் நிறைவேற்றுவது. | இறைவனுக்கு மிக உவப்பான செயல்களுள் ஒன்றாகும் (புஹாரி. முஸ்லிம்) |
| 4 ஜமாஅத்துத் தொழுகையில் முதல் வரிசையில் நின்று தொழுபவர்கள் மீது. | அல்லாஹ்வும் அவன் மலக்குகளும் சலவாத்துச் சொல்கிறார்கள். (அபூதாவூத்) |
| 5 தொழுகையில் வரிசையை சீர் செய்வதும் | நிரப்புபவரின் அந்தஸ்தை உயர்த்துவதோடு, சுவனத்தில் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நற்செயல்களும் | பிரதிபலன்களும் |
| --- | --- |
| அதன் இடைவெளியை நிரப்புவதும். | அவருக்காக ஓர் இல்லத்தையும் இறைவன் அமைக்கிறான். (ஹதீஸ் ஸஹீஹ் - அத் தபறானி) |
| 6. சுபஹூத் தொழுகையை தொழுபவர். | இறை பாதுகாப்புப் பெறுகிறார். (முஸ்லிம்) |
| 7. இரு குளிர் (சுபஹ் – அஸர்) தொழுகைகளைத் தொழுபவர். | சுவனம் நுழைவார். (புஹாரி, முஸ்லிம்) |
| 8. இஷாத் தொழுகையையும் சுபஹூத் தொழுகையையும் ஜமாஅத்தோடு சேர்ந்து தொழுதவர்களுள். | இஷாத் தொழுகையைத் தொழுதவர், இரவின் அரைப் பகுதி நின்று வணங்கியவர் போன்றும், சுபஹூத் தொழுகையைத் தொழுதவர், முழு இரவும் தொழுதவர் போன்றும் ஆகிவிடுவார். (முஸ்லிம்) |
| 9 முஅத்தின் கூறுவதை செவிமடுப்பவர் أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ ، رَضِيتُ بِاللّٰهِ رَبًّا وَبِالْإِسْلَامِ دِينًا எனக் கூறின். | அவரின் பாவங்கள் மன்னிக்கப்படும். (முஸ்லிம்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நற்செயல்களும் | பிரதிபலன்களும் |
|---|---|
| 10 கடமையான தொழுகையுடன் ஒரு நாளைக்கு சுன்னத்தாக பனிரெண்டு ரகஅத்துகள் தொழுதால். | அவருக்கு சுவனத்தில் ஒரு வீடு கட்டப்படும். (முஸ்லிம்) |
| 11 பஜ்ருத் தொழுகையின் இரு ரக்அத்துகளை (முன் சுன்னத்து) தொழுவது. | இந்த உலகு, அதில் இருப்பவைகள் அனைத்தையும் விட சிறந்ததாகும். (முஸ்லிம்) |
| 12 ளுஹர் தொழுகைக்கு முன், நான்கு ரகஅத்துகளும், அதன் பின், நான்கு ரகஅத்துகளும் தொழுபவருக்கு. | நரகத்தை அல்லாஹ் ஹறாமாக்குகிறான்.(ஸஹீஹூல் ஜாமிஉ) |
| 13 அஸர்த் தொழுகைக்கு முன், நான்கு ரகஅத்துகள் தொழுதால். | அல்லாஹ் அவருக்கு அருள் (ரஹ்மத்) புரிகிறான். (ஹதீத் ஹசன்) |
| 14 ஜமாஅத்துத் தொழு | போவதற்கும், திரும்பி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| கைக்காக பள்ளிவாயிலுக்குச் செல்லும் ஒருவருக்கு. | வருவதற்கும் எடுத்து வைக்கும் ஒவ்வொரு எட்டுக்கும். பாவங்கள் அழிக்கப் படுவதுடன் நன்மையும் பதியப்படுகின்றன. (அஹ்மத்) |
| 15 இருளில் பள்ளிவாயிலுக்கு நடந்து செல்பவர்களுக்கு. | மறுமை நாளில் பூரண ஒளி உண்டு என நன்மாராயம் கூறுங்கள். (ஹதீத் ஸஹீஹ்) |
| 16 தொழுது முடிந்ததும் سُبْحَانَ اللهِ ـ اَلْحَمْدُ لِلّٰهِ ـ اللهُ أَكْبَرُ என்று முறையே ஒவ்வொன்றையும் 33 முறை கூறுவதுடன் لَا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ என்றும் கூறி நூறாகப் பூரணப்படுத்தினால் | அவரது பாவங்கள் கடல் நுரை அளவேயானாலும் அவை மன்னிக்கப்படும். (முஸ்லிம்) |
| 17 பர்ழான (கடமையான) ஒவ்வொரு தொழுகையின் முடிவிலும் ஆயதுல் குர்சியை ஓதுபவர். | சுவனம் நுழைய மரணமே தடையாக இருக்கிறது. (முஸ்லிம்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நற்செயல்களும் | பிரதிபலன்களும் |
|---|---|
| 18 ஒரு முஸ்லிமான அடியான் வுழூ செய்தால். | சகல பாவங்களிலிருந்தும் பரிசுத்தமாகும் வரைக்கும், அவனது முகம், இரு கரங்கள், கால்கள் ஆகியவற்றிலிருந்து பாவங்கள் வெளியாகிவிடும். (முஸ்லிம்) |
| 19 ஒருவர் வுழூச் செய்த பின்னர் أشهد أن لا إله إلا الله وحده لا شريك له وأشهد أن محمدا عبده ورسوله எனக் கூறினால் | அவருக்காக, சுவனத்தின் எட்டு வாயில்களும் திறக்கப்பட்டு, அவர் விரும்பியதனூடாக அதனுள் நுழைவார் (முஸ்லிம்) |
| 20 அழகிய முறையில் வுழூச் செய்து, பின்னர் எதனையும் மறந்துவிட்டுவிடாது இரு ரகஅத்துகள் தொழுபவருக்கு. | அவரது முன் பாவங்கள் மன்னிக்கப்படும். (ஹதீத் ஸஹீஹ்) |
| 21 سُبْحَانَ اللهِ وَبِحَمْدِهِ என காலையிலும் மாலையிலும் நூறு தடவைகள் | இதுபோன்று, அல்லது இதனைவிட அதிகமாகச் சொன்னவரைத் தவிர, மறுமையில் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நற்செயல்களும் | பிரதிபலன்களும் |
| --- | --- |
| யாராவது மொழிந்தால் | இவரைப் போன்று எவரும் நன்மைகளைப் பெறமுடியாது.. (முஸ்லிம்) |
| 22 காலை மாலை<br>قل هو الله أحد - قل أعوذ برب الفلق - قل أعوذ برب الناس<br>ஆகிய மூன்று சூறாக்களையும் மூன்று முறை ஓதினால் | அனைத்திற்கும் அதுவே அவருக்கு போதுமானதாகும். (அபூதாவூத். திர்மிதி) |
| 23 بسم الله الذي لا يضر مع اسمه شيء في الأرض ولا في السماء وهو السميع العليم<br>என மூன்று முறை காலை, மாலை ஓதினால் | எத் தீங்கும் அவரை அணுகாது (திர்மிதி) |
| 24 காலையில்<br>لا إله إلا الله وحده لا شريك له له الملك وله الحمد وهو على كل شيء قدير<br>என்று பத்து முறை ஓதுபவருக்கு | பத்து நன்மைகள் எழுதப்படும். பத்துப் பாவங்கள் மன்னிக்கப்படும். பத்து தரஜாக் (அந்தஸ்து)கள் உயர்த்தப்படும். நான்கு அடிமைகளை விடுதலையிட்டதற்குச் சமனாகவும். ஷெய்தானிலிருந்து பாதுகாப்பாகவும் அமையும். (ஹதீத் ஸஹீஹ்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நற்செயல்களும் | பிரதிபலன்களும் |
|---|---|
| 25 தூய்மையான நிலையில் (வுழூவுடன்) ஒருவர் தூங்கினால். | அவரோடு ஒரு வானவர் அமர்ந்து 'இறைவா இன்ன உனது அடியானுக்கு பிழை பொறுப்பாயாக! ஏனெனில் அவன் தூய்மையான நிலையில் தூங்கிக் கொண்டிருக்கிறான்.' என கேட்டவண்ணமிருப்பார். (ஹதீத் ஸஹீஹ்) |
| 26 கடை வீதிகளில் لا إله إلا الله وحده لا شريك له له الملك وله الحمد يحيي ويميت وهو حي لا يموت بيده الخير وهو على كل شيء قدير எனக் கூறுபவருக்கு | பல்லாயிரம் நன்மைகள் எழுதப்படும். பல்லாயிரம் பாவங்கள் அழிக்கப்படும். சுவனத்தில் அல்லாஹ் அவருக்காக ஒரு வீடும் கட்டுகிறான். (திர்மிதி. ஹாகிம்) |
| 27 பேச்சுக்கள் அதிகமாகி விட்டிருந்த ஒரு சபையில் இருந்த ஒருவர் அதனை விட்டு எழமுன் سُبْحَانَكَ اللَّهُمَّ وَبِحَمْدِكَ أَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا أَنْتَ أَسْتَغْفِرُكَ وَأَتُوبُ إِلَيْكَ எனக் கூறினால் | அந்த சபையில் நடந்தவைகளை அல்லாஹ் அவருக்கு மன்னிக்கிறான். (ஸஹீஹ், அல்ஜாமிஉ) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நற்செயல்களும் | பிரதிபலன்களும் |
|---|---|
| 28 سُبْحَانَ اللهِ وَالْحَمْدُ لِلّٰهِ وَلَا إِلٰهَ إِلَّا اللهُ وَاللهُ أَكْبَرُ எனக் கூறினால் | அன்றைய தினம் அவர் செய்தவைகளில் மிகச் சிறந்தது அதுவே. (முஸ்லிம்) |
| 29 لَا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ எனப் பத்து விடுத்தம் கூறினால் | இஸ்மாயீல் (عليه السلام) அவர்களின் சந்ததியில் நான்கு ஆத்மாக் களை உரிமையிட்ட நன்மை களைப் பெறுகிறார். (புஹாரி. முஸ்லிம்) |
| 30 سُبْحَانَ اللهِ என நூறு முறை கூறினால் | ஆயிரம் நன்மைகள் எழுதப் படும் அல்லது ஆயிரம் பாவங்கள் அழிக்கப்படும். (முஸ்லிம்) |
| 31 سُبْحَانَ اللهِ وَبِحَمْدِهِ எனக் கூறினால் | சுவனத்தில் அவருக்கு ஒரு ஈத்த மரம் நாட்டப்படும். (திர்மிதி) |
| 32 பாவம் செய்த ஒருவர் வுழூ செய்து தொழுது மன்னிப்புக் கோரினால் | அவருக்கு அல்லாஹ் அதை மன்னிப்பான். (அபூதாவூத். நசயீ) |
| 33 சுபஹுத் தொழுகையை ஜமாஅத் துடன் | பூரணமான ஹஜ்ஜும் உம்றாவும் செய்த நன்மை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நற்செயல்களும் | பிரதிபலன்களும் |
|---|---|
| தொழுது, சூரியன் உதிக்கும் வரை அவ்வீடத்திலேயே இருந்து, அல்லாஹ்வை திக்று செய்து, பின்னர் இரண்டு ரக்அத்துகள் தொழுதால் | அவருக்குண்டு. (திர்மிதி) |
| 34 ளுஹாத் தொழுகையை பேணித் தொழுது வந்தால | அவர் பரிசுத்தவானாக மாறி விடுவார். (தபறானி. இப்னு குசைமா) |
| 35 இரவின் மூன்றிலொன்றின் இறுதிப் பகுதியில் நின்று தொழுது இம்மை மறுமை விடயங்களை இறைவனிடம் கேட்டால் | அல்லாஹ் அவற்றை வழங்குவான். அது ஒவ்வொரு இரவிலும் உண்டு. (முஸ்லிம்) |
| 36 ஸலாத்தைப் பரப்புபவர் | மக்களின் அன்பைப் பெறுவார். (முஸ்லிம்) |
| 37 இரு முஸ்லிம்கள் சந்தித்து, அவ்விருவரும் கைலாகு (முஸாபஹா) செய்து கொண்டால் | அவ்விருவரும் பிரியமுன்னர். அவ்விருவருக்கும் பிழை பொறுக்கப்படும். (ஸஹீஹுல் ஜாமிஉ) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நற்செயல்களும் | பிரதிபலன்களும் |
| --- | --- |
| 38 இறை பாதையில் ஒரு நாள் நோன்பு நோற்றால் | அவரை நூறு வருட நடை தூரத்திற்கு நரகத்தை விட்டும் இறைவன் தூரமாக்குகிறான். (ஸஹீஹுல் ஜாமிஉ) |
| 39 ஆஷூறா தினத்தில் நோன்பு நோற்பது | சென்றுவிட்ட வருடத்தின் குற்றத்திற்குப் பரிகாரமாக அமையும். (முஸ்லிம்) |
| 40 றமழான் நோன்புகளையும் நோற்று, அதைத் தொடர்ந்து ஷவ்வால் மாதத்திலும் ஆறு நோன்புகள் நோற்றால் | அவ்வருடம் முழுவதும் நோன்பு நோற்றவனைப் போலாவான். (முஸ்லிம்) |
| 41 அரபா தினத்தில் நோன்பு நோற்பது | சென்றுவிட்ட வருடத்திற்கும் ஏனைய வருடங்களுக்கும் குற்றப் பரிகாரமாகும். (முஸ்லிம்) |
| 42 பூரண விசுவாசத்தோடும், நன்மை தேடும் நோக்கோடும், ஒரு | இரு கீராத் நன்மை கிடைக்கும். ஒரு கீராத் என்பது உஹுத் மலை அளவாகும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நற்செயல்களும் | பிரதிபலன்களும் |
| --- | --- |
| முஸ்லிமின் ஜனாஸாவை பின்தொடர்ந்து சென்று, அதற்காகத் தொழுது, நல்லடக்கம் செய்யும் வரை சென்றால் | அதற்காகத் தொழுது முடித்து. அடக்கம் செய்யும் வரை தொடராது. இடை வழியில் திரும்பினால் ஒரு கீராத் நன்மையே கிடைக்கும். (புஹாரி) |
| 43 முஸ்லிம்களின் பாதையில் அவர்களுக்கு இடைஞ்சலாக இருக்கும் மரக்கிளையை அகற்றுபவரை | அல்லாஹ் சுவனத்தில் நுழைவிப்பான். (முஸ்லிம்) |
| 44 பாதையில் (இடையூறாக) இருக்கும் கல்லை அகற்றுபவருக்கு | நன்மை எழுதப்படும். அதன் மூலம் அவர் சுவனமும் நுழைவார். (ஸஹீஹுல் ஜாமிஉ) |
| 45 இறை வேதமான அல்குர்ஆனில் ஒரு எழுத்தை ஓதினால் அதற்கு | ஒரு நன்மையுண்டு. அதுவும் பத்து மடங்காக அதிகரிக்கப்படும். (திர்மிதி) |
| 46 இரவில் நூறு வசனங்(ஆயத்துக்)களை ஓதினால் | அவருக்கு அவ்விரவில் நின்று வணங்கிய கூலி உண்டு. (ஸஹீஹுல் ஜாமிஉ) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 47 இறை பாதையில் தர்மம் செய்தால் | அவருக்காக ஒரு வானவர் (மலக்கு) இறைவா! தர்மம் செய்பவருக்கு பிரதியுபகாரத்தைக் கொடுப்பாயாக! எனப் பிரார்த்திக்கிறார். (புஹாரி . முஸ்லிம்) |
| 48 இவ்வுலகில், ஒரு முஸ்லிமுக்கு ஏற்பட்ட துன்பங்களில் ஒன்றை ஒருவர் நீக்கி விடுவாரானால | மறுமையில் அவருக்கு ஏற்படவிருக்கின்ற துன்பங்களிலொன்றை இறைவன் நீக்கி விடுவான். (முஸ்லிம்) |
| 49 கஷ்டப்படுகின்ற ஒருவனைப் பார்த்து, அவனுக்கு ஏதாவது கொடுத்தால் | அல்லாஹ்வின் அர்ஷின் நிழலைத் தவிர வேறு நிழலே இல்லாத மறுமையில் அல்லாஹ் அவருக்கு அந் நிழலின் கீழ் இடம் கொடுப்பான். |
| 50 ஏழைகள், விதவைகள் ஆகியோருக்கு உதவி புரிபவர் | இறை பாதையில் போராடியவர், இடைவிடாது நின்று வணங்கியவர், தொடராக |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நற்செயல்களும் | பிரதிபலன்களும் |
|---|---|
| | நோன்பு நோற்றவர் போன்ற ஒருவராகி விடுகிறார். (புஹாரி. முஸ்லிம்) |
| 51 ஓர் அநாதையைப் பராமரிப்பவர் | சுவர்க்கத்தில் நபி(ஸல்) அவர்களின் தோழராக இருப்பார். (புஹாரி) |
| 52 பல் துலக்குவது (மிஸ்வாக் செய்வது) | வாயின் தூய்மைக்கும், இறை திருப்திக்கும் உதவுகிறது. (நஸாயீ . இப்னு ஹுஸைமா) |
| 53 எவரேனும் அறிவு தேடி பயணம் மேற்கொண்டால் | சுவனத்தின் பாதையை அவருக்கு இறைவன் இலேசாக்குவான். (முஸ்லிம்) |
| 54 நபி(ஸல்) அவர்கள் மீது ஒருவர் ஸலவாத்து சொன்னால் | அவர்மீது இறைவன் பத்து (முறை) ஸலவாத் சொல்கிறான். (முஸ்லிம்) |
| 55 பெற்றோர் அல்லது அவர்களில் ஒருவர் முதியவராகிவிட்ட நிலையில் அவர்களுக்குச் செய்யும் தொண்டு | சுவனத்தில் நுழைவிக்கும். (முஸ்லிம்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நற்செயல்களும் | பிரதிபலன்களும் |
|---|---|
| 56 தன் சகோதர முஸ்லி மை நோய் விசாரிக்கச் சென்றால் | அவர் அங்கிருந்து திரும்பும் வரை சுவனத்தின் அருகில் இருக்கிறார். (முஸ்லிம்) |
| 57 முஸ்லிமான ஒருவரை காலையோ அல்லது மாலையோ நோய் விசாரிக்கச் சென்றால் | எழுபதினாயிரம் வானவர் (மலக்கு) கள் அவர்மீது ஸல வாத்துச் சொல்கிறார்கள். அத் தோடு அவருக்கு சுவனத்தில் ஒரு தோட்டமும் உண்டு. (திர்மிதி) |
| 58 ஒரு சகோதரனைப்பார் த்து புன்னகைப்பது | ஒரு தர்மமாகும். (ஸஹீஹுல் ஜாமிஉ) |
| 59 ஒருவரது பண்பாடுகள், குணநலன்கள் புகழுக் குரியதாக அமைந்து விடுமானால் | மறுமை நாளில் செயல்கள் யாவும் நிறுக்கப்படும்போது அதுவே மிகவும் பாரம் கூடியதாக அமையும். (திர்மிதி) |
| 60 ஒரு விசுவாசி, தனது நற்பண்புகளினால் நற்குணங்களினால் | பகலெல்லாம் நோன்பு நோற்று இரவெல்லாம் நின்று வணங்கி யவரின் அந்தஸ்தைப் பெறு கிறார். (அபூதாவூத்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நற்செயல்களும் | பிரதிபலன்களும் |
|---|---|
| 61 தன் உறவினருடன் சேர்ந்து நடப்பவருக்கு | அவரது உணவில் விருத்தியை ஏற்படுத்துவதுடன் ஆயுளையும் இறைவன் நீடிக்கச் செய்கிறான். (புஹாரி, முஸ்லிம) |
| 62 ஒருவர் உணவு உண்ட பின் الْحَمْدُ لِلَّهِ الَّذِي أَطْعَمَنِي هَذَا وَرَزَقَنِيهِ مِنْ غَيْرِ حَوْلٍ مِنِّي وَلَا قُوَّةٍ எனக் கூறினால் | அவரது முன்னைய பாவங்கள் மன்னிக்கப் படுகின்றன. (திர்மிதி) |
| 63 துல்ஹஜ் மாதம் ஆரம்ப பத்து நாட்களில் நற் செயல்கள் புரிந்தால் | இறைவனிடத்தில் அது மிகப் பெரும் கூலிகளைப் பெற்றுத் தரும். (அஹ்மத்) |
| 64 அதானுக்கும் இகாமத் திற்கும் இடையிலான பிரார்த்தனை | நிராகரிக்கப்படமாட்டாது. (அஹ்மத்) |
| 65 இரவில் ஒரு நேரமுண்டு. அவ்வேளை ஒரு முஸ்லிம் எதையாவது வேண்டினால் | இறைவன் அதைக் வழங்கவே செய்வான். அது எல்லா இரவுகளிலும் உண்டு. (முஸ்லிம்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

66 நிச்சயமாக வெள்ளிக் கிழமை நாளில் ஒரு நேரமுண்டு. அதில் ஒரு முஸ்லிமான அடியான் தொழுது இறைவனிடம் கேட்டால்

அதை அவன் கொடுத்தே தீருவான். (முஸ்லிம்)

67 இரவின் மூன்றில் ஒன்றான இறுதிப் பகுதியில் (நின்று தொழுதால்)

ஒவ்வொரு இரவும் இறைவன் இவ்வுலகின் வானத்திற்கு இறங்கி 'என்னை அழைப்பவர் யார்? அவருக்கு நான் விடையளிக்கிறேன். என்னிடம் கேட்பவர் யார்? அவருக்கு நான் கொடுக்கிறேன். என்னிடம் பாவமன்னிப்புக் கோருபவர் யார்? அவருக்கு நான் பாவமீட்சி அளிக்கிறேன்' எனக் கூறுகிறான். (புஹாரி)

68 அங்கீகரிக்கப்பட்டு, பதிலளிக்கப்படுகின்ற மூன்று பிரார்த்தனைகளாவன

நோன்பாளியின் பிரார்த்தனை. அநியாயம் இழைக்கப்பட்டவனின் பிரார்த்தனை. பிரயாணியின் பிரார்த்தனை. (ஸஹீஹ் அல்ஜாமிஉ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 69 இறை திருப்தி வேண்டி, பள்ளிவாசல் ஒன்றைக் கட்டினால் | சுவனத்தில் அவருக்காக இறைவன் வீடொன்றை கட்டுகிறான். (ஹதீத் ஸஹீஹ்) |
| 70 நான்கு விடயங்களை ஒரு நாளில் செய்தால் (நோன்பு நோற்றல். நோய் விசாரித்தல். ஜனாஸாவில் பங்கேற்றல். ஏழைகளுக்கு உணவளித்தல்) | சுவனவாதியாக அவரை இறைவன் அங்கீகரிக்கிறான். (அஸ்ஸில்ஸிலதுஸ் ஸஹீஹா) |
| 71 வெள்ளிக்கிழமை சுபஹுத் தொழுகையை ஜமாஅத்தோடு தொழுவது | இறைவனிடத்தில் மிகச் சிறந்த ஒன்றாகும். (ஸஹீஹ் அல்ஜாமிஉ) |
| 72 வெள்ளிக்கிழமை நேரகாலத்தோடு குளித்து, வுழூவும் செய்து, கால்நடையாக, முற்கூட்டியே பள்ளிக்குச சென்று, இமாமை அண்மித்து | ஒவ்வொரு எட்டுக்கும். ஒரு வருடம் நோன்பு நோற்ற நன்மையும். நின்று வணங்கிய நன்மையும் உண்டு. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்ந்து, எதுவுமே செய்யாது காது தாழ்த்திக் கேட்டுக்கொண்டிருந்தால்

73 வெள்ளிக் கிழமை கடமையான (ஜனாபத்) குளிப்பைக் குளித்து, முதல் நேரத்திலே பள்ளிக்குச் சென்றால்

ஒரு ஒட்டகம் தர்மம் செய்த கூலியும், இரண்டாவது நபராகச் சென்றால், ஒரு மாட்டை தர்மம் செய்த கூலியும், மூன்றாவது நபராகச் சென்றால், ஒரு ஆட்டை தர்மம் செய்த கூலியும், நாலாவது நபராகச் சென்றால், ஒரு கோழியை தர்மம் செய்த கூலியும், ஐந்தாவது நபராகச் சென்றால், ஒரு முட்டையை தர்மம் செய்த கூலியும் உண்டு. (புஹாரி. முஸ்லிம்)

74 வெள்ளிக்கிழமை சூறதுல் கஹ்ப் ஓதுவது

இரு வெள்ளிக்கிழமைகளுக்கிடைப்பட்ட காலத்துக்கு ஒளியை வழங்கும்.

(ஹதீத் ஸஹீஹ்)

75 நேர்மையான இமாம்,

இறைவன் நிழல் தவிர வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறை தியானத்தில் திளைத்த வாலிபன், பள்ளியோடு தொடர்புள்ள மனிதன், அல்லாஹ்வுக்காகவே நேசித்து, அல்லாஹ்வுக்காகவே பிரிந்த இருவர், அழகும், அந்தஸ்துமுள்ள ஒரு பெண் அழைத்தபோது, நான் இறைவனைப் பயப்படுகிறேன் எனக் கூறிய ஒருவர், இடக்கரம் தெரியாது தன் வலக்கரத்தால் தானம் செய்தவன் ஆகிய அனைவருக்கும்

நிழலே இல்லாத மறுமை நாளில் அந்நிழலில் அல்லாஹ் இடம் கொடுப்பான்.

(புஹாரி. முஸ்லிம்)

76 மன்னிக்கும் மனப்பான்மையும் நிதானமாக நடப்பதும்

இறை திருப்தியைத் தேடித் தரும் இரு விடயங்களாகும்.

(முஸ்லிம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நற்செயல்களும் | பிரதிபலன்களும் |
|---|---|
| 77 தனது கையினாலும் நாவினாலும் ஏனைய முஸ்லிம்களுக்கு தீங்கிழைக்காமல் இருப்பவர்தான் | முஸ்லிம்களில் மிக உயர்வானவர். (புஹாரி. முஸ்லிம்) |
| 78 தன் இரு கால்களுக்கும், இரு தாடைகளுக்கும், இடையில் இருப்பவற்றை பொறுப்பேற்பவர்களுக்கு | சுவனத்தை நபியவர்கள் பொறுப்பேற்கிறார்கள். (புஹாரி. முஸ்லிம்) |
| 79 அல்லாஹ்வை சந்திப்பதை எவர்கள் விரும்புகிறார்களோ | அவர்களைச் சந்திப்பதை அல்லாஹ்வும் விரும்புகிறான். (முஸ்லிம்) |
| 80 விசுவாசிகளுக்கு அல்லாஹ் தயார்படுத்தி வைத்திருப்பவைகள். | எக் கண்ணும் கண்டிராதவையும், எச் செவியும் செவிமடுத்திராதவையும். எந்த மனித இதயத்தாலும் கற்பனை பண்ண முடியாதவையுமாகும். (புஹாரி. முஸ்லிம்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நற்செயல்களும் | பிரதிபலன்களும் |
| --- | --- |
| 81 இறைவன் கூறுகிறான், எவராவது ஒரு நன்மையான காரியத்தைக் கொண்டு வந்தால். | அதன் பத்து மடங்கு நன்மை அவருக்குண்டு. அல்லது அதை விடவும் நான் அதிகப் படுத்துவேன். |
| எவராவது ஒரு தீமையை உருவாக்கினால் | அதற்குரிய கூலி மட்டுமே உண்டு. அல்லது நான் அதை மன்னித்தும் விடுவேன். |
| என் பக்கம் ஒரு சாணளவு நெருங்கி வந்தால். | அவர் பக்கம் நான் ஒரு முழம் நெருங்கிச் செல்கிறேன். |
| என் பக்கம் ஒரு முழம் நெருங்கி வந்தால் | அவர் பக்கம் நான் ஒரு பாகம் நெருங்கிச் செல்கிறேன். |
| என் பக்கம் நடந்து வந்தால் | அவர் பக்கம் நான் ஓடிச் செல்கிறேன். |
| எனக்கு இணை வைக்காத நிலையில் ஒருவர் இப்புவியளவு பாவச் சுமையோடு என்னைச் சந்தித்தாலும் | அவரை நான் மன்னிக்கிறேன். (முஸ்லிம்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நற்செயல்களும் | பிரதிபலன்களும் |
|---|---|
| 82 பிரத்தியேக (சுன்னத்தான) செயல்கள் மூலம் ஒருவர் இறைவனை நெருங்கினால் | இறைவன் அவரை மிக மிக நேசிக்கிறான். அவர் கேட்கும் காதாக, அவர் பார்க்கும் பார்வையாக, அவர் நீட்டும் கையாக, அவர் நடக்கும் காலாக மாறிவிடுகிறான். இறைவனிடம் அவர் கேட்டால் கண்டிப்பாக கொடுக்கிறான். அவனிடம் பாதுகாப்புத் தேடினால் பாதுகாப்பு வழங்குகிறான். (புஹாரி) |
| 83 சூறதுல் இஹ்லாஸை (குல் குவல் லாஹு சூறா) ஒருவர் நேசம் கொண்டால் | அல்லாஹ்வும் அவரை நேசிக்கிறான். ஏனெனில், அதில் அல்லாஹ்வின் பண்புகள் கூறப்பட்டுள்ளன. (புஹாரி . முஸ்லிம்) |
| 84 எவரை அல்லாஹ் நேசம் கொள்கின்றானோ | அவரை ஜிப்ரீல் (அலை) அவர்களும், வானத்திலுள்ளவர்களும் நேசிக்கிறார்கள். பூமியிலும் அவருக்கு அங்கீகாரத்தை ஏற்படுத்துகிறான். (புஹாரி . முஸ்லிம்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நற்செயல்களும் | பிரதிபலன்களும் |
|---|---|
| 85 ஒருவருக்கு இறைவன் நல்லதை நாடி விட்டால் | அவருக்கு மார்க்கத்தில் நல்ல விளக்கத்தைக் கொடுக்கிறான். (புஹாரி . முஸ்லிம்) |
| 86 ஒரு மனிதனின் நேர் வழிக்கு ஒருவர் உதவினால் | சிவப்பு ஒட்டகையைவிட அது அவருக்கு சிறப்பானதாகும். (புஹாரி. முஸ்லிம்) |
| 87 ஒரு நலவின்பால் ஒருவரை வழிகாட்டியவருக்கு | அதைச் செய்பவரின் கூலி போன்ற கூலி கிடைக்கும். (முஸ்லிம்) |
| 88 அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புக் கோருவோருக்கு | பகல் பொழுதில் நடந்த தீயவற்றை மன்னிப்பதற்காக இரவிலும், இரவில் நடந்த தீயவற்றை மன்னிப்பதற்காக பகலிலும் இறைவன் தனது கைகளை நீட்டுகிறான். (முஸ்லிம்) |
| 89 சிறந்த முறையில் வுழூச் செய்தால் | அந்த அளவுக்கு உடலிலிருந்து பாவங்கள் வெளியேறி விடும். நகக் கண்ணிலிருந்தும்கூட வெளியேறும். (முஸ்லிம்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நற்செயல்களும் | பிரதிபலன்களும் |
|---|---|
| 90 வெறுப்புள்ள (குளிரான) நேரத்தில் வுழூவைப் பூரணமாகச் செய்தல், பள்ளிவாசலுக்கு அதிக எட்டுக்கள் வைத்து நடத்தல், ஒரு தொழுகைக்குப் பின் மற்ற தொழுகையை எதிர் பார்த்திருத்தல் ஆகிய வற்றினால் | அல்லாஹ் பாவங்களைகளை கிறான். அந்தஸ்துகளை உயர்த்துகிறான். (முஸ்லிம்) |
| 91 வுழூச் செய்து பூரணப் படுத்திய பின்னர் أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ எனக் கூறுபவருக்கு | எட்டு சுவன வாயில்களும் அவருக்காகவே திறந்து விடப்பட்டு அவர் விரும்பி யதன் ஊடாக அதில் நுழை வார். (முஸ்லிம்) |
| 92 ஐந்து தொழுகைக ளும், ஒரு ஜும்ஆவி லிருந்து மறு ஜும்ஆ வரையும் உண்டான | அக்காலப் பிரிவில் நிகழ்ந்த சிறு பாவங்களுக்கு அவையே பரிகாரமாகும். (முஸ்லிம்) |
| 93 வுழூவை சீராக்கிய பின் கடமையான தொழு | பெரும் பாவங்களில் ஈடுபட வில்லையாயின், முன் செய்த |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நற்செயல்களும் | பிரதிபலன்களும் |
| --- | --- |
| கைகளில் றுகூஉ, ஹுஷூஉ போன்றவற்றை சீராக்கித் தொழுத வர் | பாவங்களுக்கு அதுவே பரிகாரமாகும். (முஸ்லிம்) |
| 94 சுஜூது செய்வதை அதிகரிப்பது | அல்லாஹ்விடத்தில் அந்தஸ்தை உயர்த்துவதோடு பாவத்தையும் அழிக்கும். சுவனத்தில் நபியுடன் (தோழமையை ஏற்படுத்தும்) ஒன்று சேர்த்தும் வைக்கும். (முஸ்லிம்) |
| 95 தொழுகைக்காக தன் சப்தத்தை உயர்த்தி அதான் சொல்பவருக்கு | மனிதர்களும் ஜின்களும் மறுமை நாளில் சாட்சி சொல்வார்கள். (புஹாரி) |
| 96 அதான் சொல்பவர்கள். | மறுமை நாளில் மிக நீண்ட கழுத்துடன் இருப்பார்கள். (முஸ்லிம்) |
| 97 அதான் சப்தத்தைக் கேட்கும் ஒருவர் اللهم رب هذه الدعوة التامة والصلاة القائمة آت محمدن الوسيلة والفضيلة وابعثه مقاما محمودن الذي وعدته எனக் கூறினால் | மறுமை நாளில் நபிகளாரின் ஷபாஅத்தைப் பெற்றுக் கொள்வார். (புஹாரி) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்களிடமுள்ள (பொருள்கள்) யாவும் செலவழிந்துவிடும். அல்லாஹ்விடத்தில் உள்ள வைகளோ, (என்றென்றும்) நிலை பெற்றிருக்கும். எவர்கள் (கஷ்டங்களை உறுதியாகச்) சகித்துக் கொள்கிறார்களோ அவர்கள் (செய்யும் பல நற்காரியங்களுக்கு அவர்கள்) செய்ததை விட மிக்க அழகான கூலியையே நிச்சயமாக நாம் அவர்களுக்குக் கொடுப்போம்." (16:96)

"ஆகவே, எவர்கள் விசுவாசம்கொண்டு நற்கரு மங்களைச் செய்கின்றார்களோ, அவர்களுடைய பாவத்தை அவர்களைவிட்டு நிச்சயமாகப் புறக்கணித்துவிட்டு, அவர்கள் செய்த நன்மைகளுக்கு (அவற்றைவிட) மிக்க அழகான கூலியை நிச்சயமாக நாம் அவர்களுக்குக் கொடுப்போம்." (29:07)

"அவர்கள் செயல்களில் மிகத் தீயதையும், அல்லாஹ் அவர்களை விட்டுப் புறக்கணித்து (மன்னித்து), அவர்களுடைய (நற்காரியங் களுக்குரிய) கூலியை, அவர்கள் செய்ததைவிட மிக்க அழகான விதத்தில், அவர்களுக்குக் கொடுப்பான்." (39:35)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸலவாத் இப்றாஹீமிய்யா

اَللّهُمَّ صَلِّ عَلى مُحَمَّدٍ وَعَلى آلِ مُحَمَّدٍ ، كَمَا صَلَّيْتَ عَلى إِبْرَاهِيْمَ وَعَلى آلِ إِبْرَاهِيْمَ ، إِنَّكَ حَمِيْدٌ مَجِيْدٌ. وَبَارِكْ عَلى مُحَمَّدٍ وَعَلى آلِ مُحَمَّدٍ ، كَمَا بَارَكْتَ عَلى إِبْرَاهِيْمَ وَعَلى آلِ إِبْرَاهِيْمَ ، إِنَّكَ حَمِيْدٌ مَجِيْدٌ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் பிற நூற்கள்

01. அல்குர்ஆன் அஸ்ஸுன்னா ஒளியில் புகையும் புகைத்தலும் (மொழிபெயர்ப்பு)

02. சீதனம் (தொகுப்பு)

03. பித்அத் ஓர் ஆய்வு (தொகுப்பு)

04. இஸ்லாம் ஓர் இனிய மார்க்கம் (தொகுப்பு)

ஜம்இய்யது அன்சாரிஸ் சுன்னதில் முஹம்மதியாவினால் கு/தல்கஸ்பிட்டியில் கட்டி முடிக்கப்பட்ட ஜூம்ஆ பள்ளிவாயில் 2002-09-20ம் திகதி வெள்ளிக்கிழமை ஜூம்ஆத் தொழுகையுடன் திறந்து வைக்கப்பட்ட அன்று இந்நூல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# مكافآت وحوافز لكل مسلم ومسلمة

إعداد:
حبيب محمد اليحيوح

ترجمة:
شيخ فريد زين الدين

مراجعة:
الشيخ / محمد أبوبكر صديق

إصدار:
جمعية أنصار السنة المحمدية
سريلانكا
1423هـ

ISBN: 955-8732-43-5